**தினமணி (24.08.2025)**

# பாசன குளங்களை தூர்வார டிஎன்பிஎல் ரூ.5 லட்சம் நிதி

கரூர், ஆ.க.23: தோகைமலை பகுதியில் சிறுபாசன குளங்களை தூர்வாருவதற்கு டிஎன்பிஎல் ஆலை சனிக்கிழமை ரூ.5லட்சம் நிதி வழங்கியது.

கரூர் மாவட்டம், புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் தோகைமலை ஊராட்சி ஒன்றியத்திற்குள்பட்ட சங்கக்கவுண்டன்பட்டி கிராமத்தில் உள்ள சங்கக்கவுண்டன் சிறுபாசன குளம் மற்றும் வெள்ளப்பட்டி பால்மடை சிறுபாசன குளம் ஆகியவற்றை தூர்வார நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை காலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் காகித ஆலையின் பொதுமேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன் குளங்களை தூர்வாருவதற்கான ரூ.5லட்சத்துக்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேலிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




தோகைமலை பகுதியில் சிறுபாசன குளங்களை தூர்வார நிதியுதவிக்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேலிடம் சனிக்கிழமை வழங்கிய டிஎன்பிஎல் ஆலையின் பொதுமேலாளர்(மனிதவளம்) கே.கலைச்செல்வன்.

**தினத்தந்தி (25.08.2025)**

டி.என்.பி.எல். சார்பில்

# சிறுபாசன குளங்களை தூர்வாருவதற்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலை

## மாவட்ட கலெக்டரிடம் வழங்கப்பட்டது

நொய்யல், ஆக.25-

புகழூர் காகிதபுரத்தில் உள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும், நீர்வள மேம்பாட்டிற்காகவும், மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல், வாய்க்கால், குளங்களை தூர்வாருதல், மழைநீர் வழிப்பாதைகளை சீர்செய்தல் போன்ற பல்வேறு திட்டங்களை செய்து வருகிறது.




அதன்படி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டம், தோகைமலை ஊராட்சி ஒன்றியம், சங்கக்கவுண்டன்பட்டி கிராமத்தில் உள்ள சங்கக்கவுண்டன் சிறுபாசன குளம் மற்றும் வெள்ளப்பட்டி பால்மடை சிறுபாசன குளத்தை தூர்வாருவதற்காக ரூ.5 லட்சத்திற்கான காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் கரூர் மாவட்ட கலெக்டர் தங்கவேலிடம் வழங்கினார்.

மாலை மலர் 24.08.2025



கலெக்டர் தங்கவேலிடம் ரூ.5.லட்சத்திற்கான காசோலையை காகித நிறுவன பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் வழங்கிய போது எடுத்த படம்.

## சிறுபாசன குளங்களை தூர்வார

# டி.என்.பி.எல். ஆலை சார்பில் ரூ. 5 லட்சம் நிதியுதவி

வேலாயுதம்பாளையம், ஆக.24—

கரூர் மாவட்டம் காகித புரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும், நீர்வள மேம்பாட்டிற்காகவும். மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல்,

வாய்க்கால், குளங்களை தூர்வாருதல், மழைநீர் வழிப்பாதைகளை சீர்செய்தல் போன்ற பல்வேறு திட்டங்களை செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கரூர் மாவட்டத்தில் உள்ள சிறுபாசன குளங்களை தூர்வாருவதற்காக தமிழ் நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டம், தோகை மலை, ஊராட்சி ஒன்றியம், சங்கக்கவுண்டன்பட்டி கிராமத்தில் உள்ள சங்கக்கவுண்டன் சிறுபாசன குளம் மற்றும் வெள்ளப்பட்டி பால்மடை சிறுபாசன குளத்தை தூர்வாருவதற்காக ரூ.5.லட்சத்திற்கான காசோலையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், கரூர் மாவட்ட கலெக்டர் தங்கவேலிடம் வழங்கினார்.

தினமலர் 02.09.2025

# பாசன குளங்களை துார்வார ரூ.5 லட்சம் நிதி வழங்கல்

வேலாயுதம்பாளையம், செப். 2–

தமிழ்நாடு செய்தித் தாள் காகித் ஆலை நிறுவனம் கரூர் மாவட்டத்தில் உள்ள சிறுபாசன குளங்களை துார் வார ரூ.5 லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு செய்தித் தாள் காகித ஆலை நிறுவனம் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும், நீர் வள மேம்பாட்டிற்காகவும், மரக்கன்று நட்டு பராமரித்தல், வாய்க்கால் குளங்களை துார் வாருதல், மழைநீர் வழிப்பாதை சீர் செய்தல் போன்ற பல திட்டங்களை செய்து வருகிறது.



கரூர் மாவட்டத்தில் சிறுபாசன குளங்களை துார் வார காகித ஆலை சார்பில் வழங்கப்பட்ட ரூ.5 லட்சத்திற்கான காசோலையை கலெக்டர் தங்கவேலிடம் ஆலை மனித வள பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

அதன் ஒரு பகுதியாக தோகைமலை ஒன்றியம் சங்கக்கவுண்டன்பட்டியில் உள்ள சங்கக்கவுண்டன் சிறுபாசன குளம் மற்றும் வெள்ளப்பட்டி பால்மடை சிறுபாசன குளம் ஆகியவற்றை துார் வார ரூ.5 லட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது.

அதற்கான காசோலையை கலெக்டர் தங்கவேலிடம் காகித ஆலை பொது மேலாளர்(மனித வளம்) கலைச்செல்வன் வழங்கினார்.